*மீதம் இருக்கின்ற ரூ.3.50 இலட்சம் தொகை உரிய சான்றுகளைப் பெற்று உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு விரைவில் வழங்கப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், அந்தப் பகுதியில் இனிமேல் யானைகள் மற்றும் பிற மிருகங்களால் பிரச்சினை ஏற்படாத அளவிற்கு நம்முடைய வனத் துறை அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் அதைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மிக வேகமாக எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. ஒய். பிரகாஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் உங்களுக்கு ஏற்கெனவே ஒரு மூலக் கேள்வி கேட்க அனுமதித்து, அவையில் துணைக் கேள்வியும் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, அனைத்து விவரங்களையும் நான் வைத்திருக்கிறேன். மேலும், இரண்டு துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். ஒரு மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நேரமில்லை, அடுத்த கேள்வியில் வாய்ப்பிருந்தால் துணை வினா கேட்க அனுமதி அளிக்கிறேன்.*

*வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**183—**

## கூட்டுறவுக் கடன் சங்கம்

***8384—திரு. எஸ். ஈஸ்வரன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய ஊராட்சிகளை*

*2018 ஜூன் 13]*

*உள்ளடக்கி பனையம்பள்ளியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

*ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, பனையம்பள்ளி ஊராட்சியானது தொப்பம்பாளையம் மற்றும் ரெங்கநாயகன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவகார எல்லையிலும், பெரியகள்ளிப்பட்டி ஊராட்சியானது ரெங்கநாயகன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையிலும் அமைந்துள்ளன. பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய இரு கிராமங்களில் பயிரிடக்கூடிய நிலப் பரப்பு 3,284 ஏக்கர் மட்டுமே உள்ளது. எனவே, அரசு விதிகளின்படி பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய இரு கிராமங்களை உள்ளடக்கி, பனையம்பள்ளியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசு விதிகளில் இடமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

**திரு. எஸ். ஈஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழக வளர்ச்சிக்காகவும் தன்னையே அர்ப்பணித்து தவ வாழ்க்கை வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று காவேரி மேலாண்மை ஆணையம் பெற்றுத் தந்து, தூத்துக்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட உத்தரவு பிறப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) நீர் நிலைகளில் சுற்றுச்சூழல் மாசு அடைவதைத் தடுக்க மக்காத பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்து, விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் திட்டத்தைத் தொடர்ந்து, இந்நிதியாண்டில் ரூ.25 கோடி விலையில்லா நாட்டுக் கோழி வழங்கும் திட்டத்தை செயல்படுத்திய குடிமராமத்து நாயகன், மாண்புமிகு அம்மா*

அவர்களின் வழியில் அரசை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு சீர்மிகு மாற்றங்களைத் தந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நல்லமுறையில் வழிநடத்திச் செல்லும் சாதனைச் செம்மல் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், பனையம்பள்ளி மற்றும் பெரியகள்ளிப்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டேன். அதில் தொப்பம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 12 கி.மீ. தொலைவும், ரெங்கநாயகன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 6 கி.மீ. தொலைவும் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. விவசாயப் பெருங்குடி மக்கள் நீண்ட தூரம் சென்று தங்களுடைய கடனைப் பெற்று வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆக, இந்த இரண்டு ஊராட்சிகளிலும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹெக்டேர் நிலம் உள்ளது. 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சென்று, விவசாயக் கடன் பெற வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதால், இந்தப் பகுதியில் உள்ள மக்களின் நலன் கருதி, பனையம்பள்ளியை மையமாகக் கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன்

*2018 ஜூன் 13]*

*அவர்களது கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். பனையம்பள்ளி ஊராட்சியின் மக்கள் தொகை 7,366. பனையம்பள்ளி ஊராட்சியின் மொத்த நிலப் பரப்பு 2,502 ஹெக்டேர். இதில் பயிரிடக்கூடிய நிலப் பரப்பு 1,294 ஹெக்டேர். அதாவது 3,196.18 ஏக்கர் நிலம் உள்ளது. பனையம்பள்ளியைச் சேர்ந்த 1,194 நபர்கள் இரு சங்கங்களிலும் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, இந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சிறப்பினமாக எடுத்துச் செல்லப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 2 ஊராட்சிகளிலிருந்தும் வெகுதூரம் சென்று விவசாயிகள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். எனவே, 12 கி.மீ., 6 கி.மீ., செல்கின்ற இந்த சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, சிறப்பினமாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அனுமதி பெற்று, அரசுத் துறை சார்பாக பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

**திரு. எஸ். ஈஸ்வரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கட்டு, தென்மேற்கு பருவமழை பெய்து நீர் 64 அடி உயரத்தை எட்டியுள்ளதால் விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். இப்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை பனையம்பள்ளியில் அமைக்க பரிசீலிக்கப்படும் என்ற நற்செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி, விவசாய மக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். இதற்காக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பவானிசாகர் தொகுதி, தாளவாடி வட்டம், தாளவாடி பகுதியிலுள்ள துட்டகஜனூர் நியாய விலைக் கடையில் 1,400 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அந்தக் குடும்ப அட்டைகளைப் பிரித்து, அதே பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையையும்; அதேபோல் பவானிசாகர் பகுதியில், பவானிசாகர் நகரியத்தில் 1,300 குடும்ப அட்டைகள் உள்ள அந்த நியாய விலைக் கடையைப் பிரித்து கூலிஸ் லைன் பகுதியிலே*

ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையையும் அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைகளை அடுக்கிக்கொண்டே போகிறார். மூலக் கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் உள்ளது. இருந்தபோதிலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, மக்களுக்கு அரசாங்கம் வழங்குகின்ற நியாய விலைப் பொருட்கள் தங்குதடையின்றி அவர்களுடைய இருப்பிடத்திலேயே கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இன்றைக்கு 32,827 கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடத்தப்படுகின்றன. 42 கடைகள் நகரும் கடைகள். கிராமப்புறங்கள், மலைப்பிரதேசங்கள், மக்கள் எளிதில் அணுக இயலாத இடங்களில் எல்லாம் நகரும் கடைகள் மூலமாக, Vans மூலமாக நியாய விலைப் பொருட்கள் supply செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டார். பகுதி நேரக் கடையாகப் பிரிக்க வேண்டுமென்றால் ஒரு கடையில் 150 Cards இருக்க வேண்டும். தாய் கடைக்கும், அமைக்கப்படவிருக்கின்ற உத்தேச கடைக்கும் 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். எனவே, இதுபோன்ற சூழ்நிலையில் தாய் கடையில் 500 Cards இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக cards இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். சட்டத்தில் இடம் இருக்கும்பட்சத்தில், கூட்டுறவு விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு பதில் சொல்லும்போது, கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகிறார் என்று சொன்னீர்கள். எதையும் தாங்கும் இதயம் தங்களுக்கு

*2018 ஜூன் 13]*

*இருக்கின்ற காரணத்தினால்தான், மாண்புமிகு உறுப்பினர் நிறைய கேள்விகளை அடுக்குகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–30*

*வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**184—**

## துணை மின் நிலையம்

***2532—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், கீழ்மலை பகுதியிலுள்ள பண்ணைக்காடு அல்லது தாண்டிக்குடியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான பழனி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், கீழ்மலை பகுதி, பண்ணைக்காடு பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். ஏற்கெனவே, அம்மா அவர்களின் அரசு அதனைப் பரிசீலித்து அதற்கான இடத்தைத் தேர்வு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

**திரு. ஐ.பி. செந்தில்குமார்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதி மக்களின் சார்பில் நான் கேட்ட கேள்விக்கு, துணை மின்*